# சகோ.பிரன்ஹாம் அவர்களின் மேற்கோள்கள்

# 2



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள்
பேசிய செய்திகளிலிருந்து

## நீதிமொழிகள் 22:6

பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்.




ஒவ்வொரு
மனிதனுக்கும்
தனக்கென்று ஒரு சபை
இருக்க வேண்டும்
ஒவ்வொரு மனிதனுக்கும் தனக்கென்று ஒரு சபை இருக்க வேண்டும். உனக்கென்று ஒரு ஸ்தலம் இருக்க வேண்டும். ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு அலைந்து கொண்டிருக்கிறவர்களாய் இருக்கக்கூடாது. ஆனால் எங்காவது ஒரு சபைக்கு போய், அது உன்னுடைய சபை என்று அழைக்க வேண்டும்.
ஆவியைப் பகுத்தறிதல், 60-03-08, Para 18
சகோ.வில்லியம் பிரன்ஹாம்

உங்களிடத்தில் எப்பொழுதாவது உண்மையான சமாதானம் இருந்திருந்தால், நீங்கள் இயேசுவை உடையவர்களாய் இருக்கிறீர்கள். நீங்கள் இயேசுவை உடையவர்களாயில்லையென்றால் நீங்கள் அவரிடத்தில் வரும் வரைக்கும் சமாதானம் என்றால் என்ன என்று கூட உங்களுக்குத் தெரியாது.

60-06-04 யாரிடத்தில் போவோம்?, Para 123

---

சகோ.வில்லியம் பிரன்ஹாம்



நீங்கள் எறும்பிடமிருந்து ஒரு பாடத்தைக் கற்றுக் கொள்ள வேண்டுமென்று வேதம் உரைக்கிறது என்று உங்களுக்குத் தெரியும். அவர்கள் வேலை செய்யாவிட்டால், சாப்பிடக் கூடாது. எனவே அது முற்றிலும் உண்மை.



செய்தி: 64-08-23 M கேள்விகளும் பதில்களும் COD #19

சகோ.வில்லியம் பிரன்ஹாம்




அருமை நண்பனே, நான் உமக்குச் சொல்லுகிறேன், சில முக்கியமான விஷயங்களில் தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்ள மிகச் சிறந்த வழி ஜெபமே
61-10-15M
கேள்விகளும் பதில்களும் COD #15
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

நியாயத்தீர்ப்பானது காலங்கள் தோறும் இன்னும் அதிகமதிகமாக கடுமையாகிக் கொண்டே போகிறது. தேவன் தன்னோடு ஒப்புரவாகிட, பாவிகள் தன்னிடம் வரவேண்டுமென்பதற்காக முயற்சித்துக் கொண்டேயிருக்கிறார்; ஆனால் அவரது பொறுமையானது தொடர்ந்து நீடித்துக் கொண்டேயிருக்க முடியாது, தேவனுடைய பொறுமை முடியப் போகிறது.



செய்தி: 61-01-01 வெளிப்படுத்தின விசேஷம் 4 அதிகாரம் #2, Para 235

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

சகோ.வில்லியம் பிரன்ஹாம்

---

**இயேசுவானவர் எப்பொழுதுமே உங்களுடைய வாசலில் நின்றிருந்து கதவைத் தட்டிக் கொண்டிருக்கப் போவதில்லை. அவர் போதும் என்று அளவுக்கு தட்டிக் கொண்டிருக்கப்போவதில்லை அவர் போதும் என்ற அளவுக்கு தட்டி முடித்துவிட்டு திரும்பிப் போய்விடும் நேரம் ஒன்று வரும். அப்பொழுது நீங்கள் அவருடைய கதவைத் தட்டுவீர்கள், ஆனால் நீங்கள் ஒரு போதும் அவரை கண்டு கொள்ளவே முடியாது. வருவதற்கான நேரம் இருக்கையில் வந்து விடுங்கள்.**



செய்தி: 60-12-11E
லவோதிக்கேயா சபையின்
காலம், Para 276


கர்த்தருக்கு நன்றி செலுத்தாமல், நீங்கள் எந்த உணவையும் புசிக்கலாகாது. ஏனென்றால் அது தேவனுடைய வார்த்தையினாலும், ஜெபத்தினாலும் பரிசுத்தமாக்கப்படுகிறது. பாருங்கள்? அதை நீங்கள் புசிக்கும் போது கூற வேண்டியதாவது: "கர்த்தராகிய இயேசுவே, நீர் இந்த ஆகாரத்தை எனக்காக ஆயத்தப்படுத்தினீர். இப்போது, விசுவாசத்தினாலே, இந்த ஆகாரத்தைப் பரிசுத்தப்படுத்துகிறேன்; அது எங்கள் சரீரங்களுக்கு பெலத்தை அளிப்பதாக."

செய்தி: **கேள்விகளும் பதில்களும்** #4, 64-0830 E, **பத்தி எண்** 181

சகோ.வில்லியம் பிரன்ஹாம்



**ஜனங்கள் தாங்கள் அழைக்கப்படாத வேறொருவரின் ஊழியத்தை ஏற்று பாவனை செய்யும் போது அது அவர்களை முடிவில் வெடித்து சிதறச் செய்துவிடும், நீங்கள் தேவனால் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும்.**



செய்தி: 62-0513E அழுத்தத்தை வெளியேற்றுதல்

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

நான் வானொலியிலும் தொலைகாட்சியிலும் பிரசங்கிப்பதில்லை, அப்படி செய்தால், ஜனங்களிடம் பணத்துக்காக யாசிக்க வேண்டிவரும். அப்படி என்னால் செய்ய முடியாது. நான் உங்கள் சகோதரனாயிருக்க விரும்புகிறேன். தேவன் என்னை எங்கு அனுப்புகிறாரோ, அங்கு செல்ல விரும்புகிறேன். அங்கு ஐந்து பேர் இருந்தாலும், அங்கு செல்ல விரும்புகிறேன். அங்கு பத்து லட்சம் பேர் இருந்தாலும், அங்கு செல்ல விரும்புகிறேன். நான் செல்வதற்கு தேவன் ஒரு வழியை உண்டு பண்ணுவார். அவ்வளவுதான். விசுவாச வாழ்க்கையை நான் வாழ்கிறேன். நாம் எல்லோருமே அதைத்தான் செய்யவேண்டும்.

செய்தி: **62-06-03 கடைசிக் கால சுவிசேஷபணி**


சகோ.வில்லியம் பிரன்ஹாம்



**நீங்கள் வீட்டில் தங்கிவிடவேண்டாம். தேவன் உங்கள் இருதயத்தில் வாசம் செய்வாரானால், உங்கள் சகோதரருடன் ஐக்கியங்கொள்ள, இக்கூடாரத்தின் கதவுகள் திறக்கும் வரைக்கும் உங்களால் காத்திருக்க முடியாது. அத்தகைய உணர்ச்சி உங்களில் இல்லையென்றால், நீங்கள் ஜெபத்தில் தரித்திருக்க வேண்டிய நேரம் இதுவே என்று உங்களிடம் கூற விரும்புகிறேன்.**

செய்தி: 63-07-28 கிறிஸ்து தேவனுடைய பரமரகசியத்தின் வெளிப்படுதலாயிருக்கிறார்

சகோ.வில்லியம் பிரன்ஹாம்



பாவம் மிகவும் எளிதாகவும், பசியை உண்டு பண்ணுவதாகவும், இனிமையாகவும் உள்ளது. அதற்குள் விழுவது மிகவும் எளிது. செய்யக்கூடிய சிறந்த காரியம் என்னவெனில், அது தோன்றுவதைக் காணும்போதே, அதிலிருந்து விலகியிருத்தலே. திரும்பிப் போய் விடுங்கள். உண்மையான கிறிஸ்தவனாக இருங்கள்!



சகோ.வில்லியம் பிரன்ஹாம்

செய்தி: 61-10-15M கேள்விகளும் பதில்களும் COD #15

சற்று முன்பு, பிரசங்கத்தின் தொடக்கத்தில் நான் உங்களிடம் என்ன கூறினேன்? தொண்ணூறு மைல் வேகத்தில் ஒரு கார் சாலையின் வழியாக வருவதைக் காண்பீர்களானால், அதன் வழியிலிருந்து விலகுங்கள். அது உண்மை! நீங்கள் அப்படிப்பட்ட ஒரு சிறு மாற்றத்தை ஏதாகிலும் ஒன்றில் காணும்போது, அதிலிருந்து விலகுங்கள். அவ்விதமான தரையில் நீங்கள் இருக்கக் கூடாது. **சாத்தான் உங்களுக்கு முன்பாக ஏதாவதொன்றைக் கொண்டுவந்து, அது உங்கள் ஆத்துமாவை சேதப்படுத்தி உங்களை நரகத்துக்கு அனுப்பி விடும்.** அதிலிருந்து விலகியிருங்கள்! **பொல்லாங்கை கண்டால் அதைப் புறக்கணியுங்கள்.** அது உண்மை.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

செய்தி: 61-10-15M கேள்விகளும் பதில்களும்

**அது வருடத்தின் எந்த நேரம் என்று நீங்கள் காணவிரும்பினால், நீங்கள் நாட்காட்டியைப் பார்க்கின்றீர்கள். இரவின் எந்த நேரம் என்று நீங்கள் காணவிரும்பினால், நீங்கள் கடிகாரத்தைக் காண்கிறீர்கள். நீங்கள் எந்த நாளில் வாழுகிறீர்கள் என்பதைக் காண விரும்பினால், யூதர் எங்கே இருக்கின்றார்களோ அங்கே பாருங்கள். அதுதான் தேவனுடைய மணிக்காட்டி ஆகும்.**

செய்தி: 53-0729 —
**ஆதியாகமத்தின் பேரிலான கேள்விகளும் பதில்களும்**

**சகோ.வில்லியம் பிரன்ஹாம்**






இந்த தேசம் நிலைநிற்கிற காரியங்களில் ஒன்று, அவர்கள் யூதருக்கு எப்பொழுதும் மரியாதை அளித்து, யூதனுக்குரிய ஸ்தானத்தை கொடுப்பதன் காரணம் என்று நான் நினைக்கிறேன். அது உண்மை. ஒரு யூதனை நீங்கள் கனப்படுத்தினால், தேவன் உங்களைக் கனப்படுத்துவார்.

ஆனால் புறஜாதியாரில் தேவனுடைய கட்டளையைக் கைக்கொள்ளாதவர் இருப்பது போன்று யூதரிலும் உள்ளனர்.

செய்தி: **63-0322 — ஐந்தாம் முத்திரை, Para 287, 288**

**சகோ.வில்லியம் பிரன்ஹாம்**



**நீங்கள் கர்த்தருடைய வருகையைக் காணும்வரையில், பெரிதான எதுவும் நடப்பதை ஒருபோதும் காணமாட்டீர்கள். இப்பொழுது நினைவிருக்கட்டும்.**

செய்தி: **63-01-18 சத்தியத்தின் ஆவி**

**சகோ.வில்லியம் பிரன்ஹாம்**



இப்பொழுது நாம் நம்முடைய சந்ததியில் கர்த்தருடைய வருகையை எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறோம். நம்முடைய சந்ததியில் நான் எழுப்புதலை எதிர்பார்க்கவில்லை, கர்த்தருடைய வருகையையே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

செய்தி: **65-11-25 கிறிஸ்துவின் மணவாட்டியின் காணக்கூடாத இணைப்பு**

சகோ.வில்லியம் பிரன்ஹாம்



# தேவனுக்கு முன்பாக மனந்திரும்புதல் அவருடைய கோபத்தை நிறுத்துகிறது

செய்தி: 63-07-24 தேவன் ஒரு மனிதனை முதலில் எச்சரிக்காமல் அவனை நியாயத் தீர்ப்புக்குள் கொண்டு வருவதில்லை

சகோ.வில்லியம் பிரன்ஹாம்



சாண்டாகிளாஸ் (Santa Claus) என்பது ஒரு கட்டுக்கதைத்தானே தவிர வேறெதுவுமில்லை. அப்படிப்பட்ட ஒரு காரியமானது இருந்ததே கிடையாது !

பிள்ளைகளுக்கு நீங்கள் பொய்களைக் கூறுவீர்களானால் நியாயத்தீர்ப்பின் நாளிலே அதற்காக நீங்கள் பொறுப்பாளியாவீர்கள். ஆமாம்.



செய்தி: **தேவனால் சுற்றப்பட்ட வெகுமதி, 25.12.1960**

சகோ.வில்லியம் பிரன்ஹாம்

**நான் இந்த மகத்தான அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஜனாதிபதியாய், அல்லது ஒரு எல்விஸ் பிரஸ்லியாய் அல்லது ஒரு பாட் பூனாய் அல்லது நீங்கள் அதை யார் என்று கூற விரும்புகிறீர்களோ அவ்வாறிருப்பதைக் காட்டிலும் இந்த உலகத்தால் புறக்கணிக்கப்பட்ட ஜனங்களோடு என்னுடைய ஸ்தானத்தை தெரிந்து கொண்டு, அவருடைய சக ஊழியனாயிருந்து, கர்த்தராகிய இயேசுவின் குமாரனாயிருக்கவே விரும்புகிறேன். நான் அந்தவிதமாகவே என்னுடைய வழியைத் தெரிந்துகொள்வேன்.**

செய்தி: 58-0720M — விசுவாசத்தினாலே மோசே, Para 107

சகோ.வில்லியம் பிரன்ஹாம்



சகோ.வில்லியம் பிரன்ஹாம்

# செய்தி: **பதறல், 63-09-01E**

ஓ, மிருதுவான இரட்சகரே என்னைக் கடந்து சென்றுவிடாதேயும்,
என் எளிமையான கூக்குரலைக் கேட்டருளும்,
மற்றவர்களை நீர் சந்திக்கும் போது,
என்னைக் கடந்து சென்று விடாதேயும்



**பெண்மணிகளே, நான் இதை மரியாதையுடன் கூறுகிறேன், ஒரு ஸ்திரீயானவள் சமையல் அறையை விட்டு வெளியேறுவாளானால், அவள் தன்னுடைய ஸ்தானத்திலிருந்து வெளியே சென்றுவிட்டாள். அது உண்மை. அவள் அந்த இடத்தைச் சார்ந்தவளாகத்தான் இருக்கின்றாள். அதற்கப்பால், அவளுக்கு வேறு இடம் கிடையாது.**

செய்தி: 56-0513 - **மோசேயின் பேரிலான போதனை**

சகோ.வில்லியம் பிரன்ஹாம்



**கர்த்தருடன் போவதற்கு ஆயத்தமில்லாத ஒரு வியாதியற்ற மனிதனாய் இருப்பதைவிட கர்த்தருடன் ஆயத்தமாக உள்ள ஒரு வியாதிப்பட்ட மனிதனாய் இருப்பதையே விரும்புவேன். ஆயத்தமாய் இருப்பது நல்லது. அது எப்படியாயினும், நாம் ஆத்துமாவிலும், சரீரத்திலும் நலமாக இருப்பதை தான் தேவன் விரும்புகிறார். நம்முடைய எல்லா அக்கிரமங்களையும் அவர் மன்னித்து, நம்முடைய நோய்களையெல்லாம் அவர் குணமாக்குகிறார்.**

---

*செய்தி:* 58-10-12 திடீரென்று சபையானது இரகசியமாக மறைந்து போகுதல்

---

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# தேவன் எப்போதுமே தமது ஜனங்களுக்காக யுத்தம் செய்வார்

## (God will always fight for His people)

செய்தி: **காணக்கூடாததை நோக்கிப் பார்த்தல், ஆகஸ்டு 16, 1950, பாரா 4**



சகோ.வில்லியம் பிரன்ஹாம்

நீங்கள் தேவனுக்காக எதையாகிலும் செய்ய விரும்பினால், அவருடைய ஜனங்களுக்கு எதையாகிலும் செய்யுங்கள். நீங்கள் உங்களைக் குறித்துக் கூறப்படும் நல்ல காரியம் எதையாவது விரும்புவீர்கள் என்றால், வேறு யாரைக் குறித்தாவது நல்ல காரியம் ஏதாவது கூறுங்கள். வேறு யாரையாவது ஆசீர்வதியுங்கள், நீங்கள் வேறு யாரையாகிலும் ஆசீர்வதிக்கையில், நீங்கள் தேவனையே ஆசீர்வதித்துக் கொண்டிருக்கிறீர்கள். இயேசு, "இந்த என்னுடைய சிறியவர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்" என்று கூறியிருக்கிறார். எனவே, அது சத்தியம் என்பதை நாம் அறிவோம்.

செய்தி: **எங்கள் நம்பிக்கை தேவனிடத்தில் இருக்கிறது**

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

நல்லது, வேதாகமம், “உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள்” என்று கூறுகிறது. **ஒவ்வொரு நபரும் மற்றவருக்காக ஜெபம் பண்ண வேண்டும்.** நாம் பிரிவுகளாக உள்ள ஒரு குழு அல்ல; நாம் ஒரு முழு மொத்தமான, ஒன்று சேர்க்கப்பட்ட குழுவாகும். பாருங்கள்?




செய்தி: 53-06-09A பிசாசியல் (மதச்சார்பான மண்டலம்) #2

# ஜெபம் காரியங்களை மாற்றி விடுகிறதென்று நாமறிவோம்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

செய்தி: 61-10-15M கேள்விகளும் பதில்களும்

**நாம் தினந்தோறும் ஜெபிக்கவில்லையென்றால், எல்லா நேரமும் இரத்தத்தின் கீழ் நம்மை வைக்கவில்லையென்றால், உன்னுடைய கிறிஸ்தவ அனுபவத்தில் உலர்ந்து போய், மரித்துவிடுவாய்.**

*நீ இதை விசுவாசிக்கிறாயா?, 50-0716, பத்தி எண் E-64*

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**



**எனவே நீங்கள் எந்த ஒரு காரியத்தையும் செய்யும் முன்பு, எப்போதும் கண்டிப்பாக கர்த்தரிடம் ஆலோசனை பெறவேண்டும்.**


**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

செய்தி: 61-04-26 தீர்க்கதரிசி மிகாயா




நம்முடைய ஜெபத்திற்குப் பதில்
கிடைப்பதைப் பார்ப்பது
வரையில், நம்முடைய
ஜெபத்தை நிறுத்தக்கூடாது.
எதிர்பார்ப்பு, 61-0207, பத்தி எண் E-17
வில்லியம் மரியன் பிரன்ஹாம்

வில்லியம் மரியன் பிரன்ஹாம்



நீங்கள் இரகசியமாக ஜெபிக்கிறீர்களா? அந்த இடத்திலேயே தரித்திருங்கள். உங்களுடைய அறைகளுக்குச் செல்லுங்கள். எங்காவது ஒழிந்து கொள்ளுங்கள், கீழே முழங்கால்படியிடுங்கள், தேவனுக்கு முன்பாகக் காத்திருங்கள். அங்கேயே காத்திருங்கள்.

இயேசுவின் பட்சம் சேர்ந்திருத்தல், 63-1226, பத்தி எண் 110



ஒரு உண்மையான விசுவாசி அவன் யாதொன்றைச் செய்யுமுன்பு அது எவ்வளவு நன்றாகத் தோன்றினாலும் அவன் முதலாவதாக தேவனிடத்தில் ஆலோசனை கேட்பான். ஆமென். ஆம், ஐயா.

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

செய்தி: 61-04-26 தீர்க்கதரிசி மிகாயா

**நீங்கள் எப்பொழுதுமே தேவனுடைய ராஜ்யம் எங்குள்ளதோ, தேவனுடைய மகிமை எங்கு ஊற்றப்படுகிறதோ, அங்கு தங்கியிருக்க வேண்டும், ஆவிக்குரிய விதமாக நீங்கள் இரவும் பகலும் போஷிக்கப்படக்கூடிய இடத்தில் தங்கியிருங்கள்.**

செய்தி: **வேறொருவரால் விளையும் பாதிப்பு,** 13.10.1962

சகோ.வில்லியம் பிரன்ஹாம்






இந்த புத்தாண்டு தொடக்கத்தில் "எனது புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்" என்று கூறாமல், **"கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக"** என்று கூறுகிறேன், அவர் அப்படி செய்வாரானால், இந்த புத்தாண்டில் அது மாத்திரமே நமது தேவையாயுள்ளது. அவர் அப்படி செய்வாரென நம்புகிறேன்.

**சகோ.வில்லியம் பிரன்ஹாம்**

செய்தி: 62-12-31 போட்டி



# சகோ.பிரன்ஹாம் அவர்களின் மேற்கோள்கள்

## 2

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து